12th March 1959]

THE HON. SRI P. KAKKAN : (a) Scholarships are given from the provision made in the budget for the award of scholarships. No separate provision is made for residential scholarships. So far 789 college students and 1,295 high school students belonging to the Scheduled Castes have been granted residential scholarships.

(b) Six hundred and sixty-six scholarships for college courses and 607 scholarships for high school courses have been granted.

SRI P. G. MANICKAM : காலேஜ்களிலே படிக்கும் ஹரிஜன மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்குவதற்காக இந்திய சர்க்காரால் ஒதுக்கப்பட்ட தொகை எப்பொழுது கிடைத்தது ? அது ஹரிஜனங்களுக்கு எந்த மாதத்தில் வழங்கப்பட்டது ?

THE HON. SRI P. KAKKAN : அந்தத் தகவல் என்னிடம் இப்பொழுது இல்லை.

SRI M. P. PERIASAMI : சட்டக் கல்லூரியில் பயிலும் ஹரிஜன மாணவர்களுக்கு இன்னும் உபகாரச் சம்பளம் கொடுக்கப்படவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI P. KAKKAN : எல்லா மாணவர்களுக்கும் கொடுக்க ஏற்பாடாகியிருக்கிறது. ஏதோ ஒன்றிரண்டு இடங்களில் கொடுக்கப்படவில்லையென்றால் அதற்கு ஏதாவது காரணங்கள் இருக்கலாம். விண்ணப்பம் போட்டதில் காலதாமதம் போன்று இப்படி ஏதாவது காரணம் இருக்கலாம். எப்படியிருந்தாலும் கனம் அங்கத்தினர் அவர்கள் எனக்குத் தகவல் தெரிவித்தால் கவனிக்கலாம்.

SRI T. S. RAMASWAMY PILLAI : May I know whether these scholarships are given to all Harijan College students or only to a stipulated few? What are the standards or criteria on the basis of which these scholarships are given?

THE HON. SRI P. KAKKAN : சர்க்கார் ஏற்படுத்தியுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு எல்லா ஹரிஜன மாணவர்களுக்கும் கொடுக்கப்படுகிறது.

Block Development Scheme

* 743 Q.—SRI P. S. SANTHANAM : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு ஜில்லா, செங்கம் தாலூகா, கன்ராம்பட்டு பிர்க்கா தாணியம்பாடி பிர்க்காக்களை தேசிய வளர்ச்சி (பிளாக் டெவலப்மெண்ட்) திட்டத்தின் கீழ்க் கொண்டுவர சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

(ஆ) அப்படி உத்தேசம் இருந்தால், எப்போது கொண்டு வரப்படும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ((a) Yes.

(b) It cannot categorically be stated when they will be taken up. They will have to wait for their turn.

SRI P. S. SANTHANAM : தலைவர் அவர்களே, தண்ட்ராம்பட்டு கிராமத்தையும் ப்ளாக் டெவலப்மெண்ட் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சென்ற ப்ளானிங் கமிட்டிக் கூட்டத்தில், அதாவது 1958-ம் ஆண்டில், வேலூரில் நடந்த கூட்டத்தில், குலுக்குச் சீட்டு போட்டு எடுத்தபொழுது தண்ட்ராம்பட்டைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று விழுந்தது. அது இதுவரையிலும் எடுக்கப்படவில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அப்படியானால், அதை உடனடியாக எடுத்துக் கொள்ள சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த சீட்டு போட்டு முடிவு செய்யும் வழக்கத்தை சர்க்கார் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை.